




ஓலை 108| ஓசை 231| பிப்ரவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட சோர்வு.

## பொருள்

வளர்ச்சியும் அழிவும் வார்த்தையால் வருவதால்
நிதானித்தும் சோர்வு ஏற்படாமலும் பேச வேண்டும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

**கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி!**

**அடிமறி மண்டில ஆசிரியப்பா**



மேகம் வேர்த்தால் வீழ்தல் மழையே;
ஆக்கம் வேர்த்தால் அதுவே செழிப்பு:
மலையும் வேர்த்தால் மலையரு வியோடும்;
உலையும் வேர்த்தால் உணவாய் வாய்க்கும்;
கடலும் வேர்த்தால் கடலலை யாகும்;
மடலும் வேர்த்தால் மதம்கொளும் யானை;
மரமும் வேர்த்தால் மரப்பா லாகும்;
அரவம் வேர்த்தால் அதுவே நஞ்சு;
பூக்கள் வேர்த்தால் பூவில் மகரந்தம்;
பாக்கள் வேர்த்தால் படையே நடுங்கும்;
மனமும் வேர்த்தால் வள்ளல் குணமே;
இனமும் வேர்த்தால் இனத்தின் வளர்ச்சி;
உடலும் வேர்த்தால் ஓடிடும் நோயும்;
இடரும் வேர்த்தால் இன்னல் பெருக்கும்;
விருப்பும் வேர்த்தால் வையம் கேட்கும்;
கருப்பு வேர்த்தால் காலைப் புலரும்;
வயலும் வேர்த்தால் மகசூல் கூடும்;
புயலும் வேர்த்தால் புவியும் பொசுங்கும்;
உழவர் வேர்த்தால் உணவோ பெருகும்;
நிழலும் வேர்த்தால் நிறைமன மேது?
அகமும் வேர்த்தால் அறமே நிலைக்கும்;
மகனும் வேர்த்தால் மாள்வர் பெற்றோர்;
கொற்றவன் வேர்த்தால் குடிகள் சிறக்கும்.
அற்றிடா உளத்தால் அவரவர் செழிப்பர்;
கொற்றவன் போல குடிகளும் வேண்டும்;
பற்றிலா நெஞ்சம் பெற்றிட வேண்டும்;
எற்றிசை யாயினும் ஏழ்மை முறிப்போம்;
உற்ற உதவிகள் ஓங்கிடச் செய்வோம்;
எல்லா மொன்றென உணர்த்தி வாழ்வோம்;
எல்லை யிலாமல் ஏற்றம் அடைவோம்!




**இலக்கணக் குறிப்பு:**

அடி தோறும் ஈரசைக் கொண்ட இயற்சீரே நான்கு நான்கு சீர்களாக வரும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். ஒவ்வொரு அடியும் பொருள் முடிதல் வேண்டும். கீழிருந்து மேலே, மேலிருந்து கீழே அடிகளை மாற்றிப் போட்டு வாசித்தாலும் பொருள் மாறாது ஒவ்வொரு அடியும் ஏகாரத்தில் முடிதல் வேண்டும் தொடர்ச்சியாக எத்தனை அடிகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# கருணை

**இன்னிசை வெண்பா**

இன்னல் அகற்றிட இன்சொல் கழறியே
அன்பாய் அழைத்தே அடக்கமாய் ஈந்திட
நன்னிலை பெற்றே நலமுடன் வாழவே
கன்றல் அகலுமே காண்.

**(குறள் வெண்பா)**

மனதில் கருணை மலர்ந்திட ஏகும்
அனந்த லெனுமோர் அனல்.

**(நிலை மண்டில ஆசிரியப்பா)**

பசித்தவர் முகத்தைப் பார்க்கக் கூசியே
நசித்திடும் பிணியை நில்லா தோட்டவே
அசித்திட உணவினை அருளுடன் வழங்கிட
கசிந்தே நெஞ்சிலே கடமையாய் நினைந்திட
நசிவை நீக்கியே நயன்மையை அடைந்திட
மசிந்தே நாளும் மாண்புடன் நடந்திட
வசியம் செய்திட வசைதல் நீங்குமே.
கசிவை நீக்கியே களிப்பை நல்குமே.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# கிளர்ச்சிச் செய விரும்பு

*பா வகை* - கட்டளைக் கலித்துறை ஐஞ்சீர் நெடிலடிப் பாடல்.
*நேரசை கட்டளைக் கலித்துறை*
*தளை-* நேர் முன் நிரை/ நிரை முன் நேர்

தாழ்ந்தும் பணிந்தும் வாழா தரையில் தலைநிமிர்வாய்
கீழ்மைப் படுத்தும் கயவரை வெல்ல கிளர்ந்தெழுவாய்
சீழ்மை பிடித்தே கிடக்கும் கயவரை சீர்குலைப்பாய்
வாழ்ந்தால் மனத்தில் துணிந்தே எழுந்தே வளர்வாயே

எல்லாம் எனக்கென என்றுமே வாழ்ந்திடா ஈன்றிடுவாய்
இல்லா நிலையை ஒழித்துமே என்றும் ஓங்கிடுவாய்
கல்லாய் இருக்கும் கயவரைக் கண்டால் கடிந்துரைப்பாய்
நல்லன செய்ய தடையும் களைந்தே நடப்பாயே.



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# அன்பே தெய்வம்

அன்னைக்கு இணை
அன்னையே.

ஆற்றுப் படுத்துதலில்
வல்லவளே.

இல்லை எனாத
இன்பமே.

ஈகையில் என்றும்
உயர்ந்தவளே.


உலகை உள்ளடக்கிய
உன்னதமே!



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மாற்றம்

மாற்றத்தை பலரிடம் எதிர்பார்த்து
நம்மிடம் நாம் தோற்று போகிறோம்
யாரும் மாறுவதற்கு தயாராகுவதில்லை
பிறர் மாறுவதை விரும்புகிறார்கள்
மாற்றத்தை நோக்கிய பயணத்தில்
ஒரு அடி நம்முடையதாக இருக்கட்டும்!
மாற்றத்தை நம்மில் இருந்து உருவாக்குவோம்
மனிதர்களின் எதிர்பாராத மாற்றம் நமக்கு
எதிர்பாராத அளவு ஏமாற்றத்தைத் தரலாம்
மாற்றத்தை நாம் ஏற்றுக்கொள்ளுவோம்!
கசப்பான உண்மைகள் இருந்தும்
அதை மாற்றும் நபர்களை மதிப்போம்!
மாற்றம் நம்மில் தொடங்கட்டும்
நம்வாழ்க்கையைநாம்மாற்றுவோம்!



கவிஞர் க. பூமணி, சென்னை

# கேட்கவேயில்லை

நிலவைக் கேட்டாள்
எடுத்துக்கொடுத்தேன்.
தவழும் மேகங்களைக் கேட்டாள்
அள்ளிக்கொடுத்தேன்.
மணம் பரப்பும்
மலர்களைக் கேட்டாள்
கொய்துக்கொடுத்தேன்.
அவள் கேட்ட
இன்னபிறவெல்லாமும்
வாரிவாரிக்கொடுத்தேன்.
என்னையும்
அவள் மீது எனக்கிருந்த
தீராக்காதலையும்
கடைசிவரைக்கும்
அவள் கேட்கவேயில்லை.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கருமை

நீ வெறுக்கும் எந்தன் நிறம்!
உலகம் ரசிக்கும் எந்தன் நிறம்!
உலகை ரசிக்க உதவும் நிறம்
பெண்ணையெல்லாம் வர்ணிக்க
நீ கையிலெடுக்கும் 'நிலவு' கூட
என் நிற (கருமை நிற )வானில் தான்
அழகு - ஆம்
செந்நிற வானிலும் இருக்கிறது
உம் வெள்ளை ஒளி நிலா
புலப் படுகிறதா? -நம் கண்களுக்கு
நேர்த்தியாக
இதையெல்லாம் ரசிக்க பெண்பால்
திரைகளுக்குள் உலவும் என் நிற
விழியே வேண்டும்!
ஆம் - கருவிழி அல்லாத கண்ணுன்டோ?
அப்படி உண்டெனில் அது கண்ணோ?
கருமை என்றதால் விழியை
பிடிங்கி எறிந்தவன் சொல்லட்டும்
கருமை அழகில்லை என்று!
கருமை நிற வானில் தெரிகிறதால்
அழகில்லை நிலவென்று வெறுப்பவன்
எண்ணலாம் கருமை வெறுமை என்று !
இயற்கையின் போது ரசிக்கின்றாய்!
என்னூடே திளைக்கின்ற போது வெறுக்கின்றாய்!
நீ ரசித்திட பிறந்திடவில்லை யான்
இவ்வுலகை ரசிக்கவே!
யாசிக்கவே பிறப்பெடுத்திருக்கிறேன்!



கவிஞர் க. நிவேதா, பூபாளி

# ஹைக்கூ கவிதைகள்

தாயின் பாசம்
தொடர்ந்து கொண்டே இருக்கிறது
ஓடும் நீர்

வானத்து நிலவை
எட்ட முடியவில்லை
விடைபெற்ற பேருந்து

கண்ணில் இருந்து
நீர்த்துளி சொட்டுகிறது
மூடாத குழாய்

விளையாடும் மழலைகள்
சத்தமாய் பேசிக்கொண்டிருக்கின்றன
தென்னங் கிளிகள்



வீதியில் வயோதிபர்
மெதுவாக நகர்ந்தபடி
செடியில் நத்தை

மரத்தில் பழம்
தொங்கிக் கொண்டிருக்கிறது
குருவியின் கூடு

ஒட்டகத்தின் திமில்
அசைந்து செல்கிறது
பெண்ணின் தலை

தொழிலாளியின் முகத்தில்
சுருக்கங்களை நேராக்க முடியவில்லை
கசங்கிய ஆடை

கழுவாத முகத்தில்
விடியலை காணவில்லை
மழை நாள்

சிந்திய மழைத்துளி
குழிகள் தோண்டுகிறது
குழிநரி பூச்சி

கவிஞர் சேஹு மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# இனிப்பாக

தொல்லைகள் இல்லை எனில்
தூரம்தான்.
எல்லைகள் வகுத்துக்கொண்டால்
இடைவெளிதான்.
தொல்லைகள்தான் வேண்டும்
தொடர்வதற்கு நேசம்.
இல்லையெனில் இல்லை
இனிப்பான சுவாசம்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# சீவக சிந்தாமணி (பதின்மூன்று)

3. காந்தருவதத்தையார் இலம்பகம் )



வானஊர்தியில் பறந்து வந்தனர் இராசமாபுரம்
பாசமாக அழைத்து வந்தான் தத்தையை
நேசமாக நடந்தவற்றை பதுமையிடம் கூறினான்
வாசமாக அவளைக் கட்டிப்பிடித்து ஆசீர்வதித்தாள்
(தத்தை: காந்தருவதத்தையார்)

அவள் விரும்பிய வாழ்க்கை அமையனும்
"இவளே இனி நம்முடைய மகளாவாள்"
இவள்மீது மனைவியின் அக்கறைஉணர்ந்தான்
அவளை தோழியுடன் கன்னிமாடத்தில் சேர்த்தான்

கெட்டிக்காரி தத்தைக்கு யாழிசைக்க தனி இடம்
கட்டியங்கார மன்னன் சம்மதம் பெற்றான்
கட்டினான் மணி மண்டபம் யாழிசைக்காக
சிட்டுப்போல் யாழிசை எங்கும் பரவியது

"யாழ்ப்போரில் வெல்பவனே அவளை மணமுடிப்பான்"
பட்டி தொட்டி எல்லாம் முரசறைவித்துத் தெரிவித்தான்
போட்டிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்தான்
அடுத்த தேசத்தவர்கள் ஆர்வமுடன் வந்தார்கள்

வெவ்வேறு நாடுகளில் வந்த மன்னர்கள்
ஒவ்வொருவராக யாழிசையில் திறமை காட்டினர்
அவரவர் யாழிசையில் தோற்று வெளியேறினர்
எவருக்கும் தத்தையை வெல்லும் தகுதியில்லை

இசையில் தத்தையை வெல்ல முடியவில்ல
திசை எட்டுக்கும் ஒருவர்கூட தேறவில்லை
வசைச் சொல்லோடு நாடு திரும்பினர்
கசையடி பட்டதுபோல் மனம் நொந்தனர்

திருவிழா கொண்டாட்டம் மக்கள் மகிழ்ச்சி
ஆறு நாட்களில் யாழப்போர் முடிந்தது
பார்போற்றும் அழகியானாள் தத்தையை
திருமணம் முடிக்க நடந்ததே யாழ்ப்போர்

வணிகன் சீவகன் யாழ்ப்போர்க்கு தயாரானான்
பணிமனையில் நண்பன் புத்திசேனன் சந்தித்தான்
அணியன் சீவகன் விருப்பத்தை அறிந்தான்
துணிந்து செயல்பட சீவகனை ஊக்குவித்தான்

புத்திசேனன் தந்தை கந்துக்கடனிடம் கூறினான்
"பத்திரமாக சென்று வென்று வரவேண்டும்
எத்திக்கிலிருந்தும் பகைவர்கள் தாக்கலாம்
சத்தியமாக எதையும் யோசித்துப் பேசவேண்டும்"
(கந்துக்கடன் மேலும் கூறினான்)

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# மயக்கும் விழியழகி வியக்கும் மொழியழகி



சின்ன இடையழகி
சிங்கார நடையழகி
மந்தாரச் சிரிப்பாலே
மயக்கும் மந்திரக்காரி

ஆலவட்டம் போட்டுத்தான்
ஆளைத்தான் இழுக்கிறியே
தங்கமாச் சொலிக்கிறியே
தாளாமத்தான் தவிக்கிறேனே

அழகானப் புள்ளிமானே
அன்பான அன்னமே
ஏக்கமாச்சு ஒம்மேலத்தானே
ஏறெடுத்துப் பாருபுள்ளே

கண்டுக்காமப் போறியே
கவலையாச்சு நெஞ்சுதானே
வாட்டத்தைப் போக்கிடு
வாலிபமும் கெஞ்சுதே

செவந்திருக்கும் சின்னபுள்ள
செம்பருத்தி நெறத்துக்காரி
மாமனத்தான் பாரடியோ
மயக்கத்தை தீரடியோ

எட்டித்தான் போவதென்ன
ஏங்கத்தான் வைப்பதென்ன
பக்கத்துல வந்திடடி
வெக்கத்தை தள்ளிவையடி

மயக்கும் விழியழகி
வியக்கும் மொழியழகி
காந்தமாய் ஈர்த்தவளே
கனியிதழ் அழைக்குதே

முத்தமொன்னு தந்தாலென்ன
முத்தாரமே முழுநிலவே
சம்மதம் சொல்லிடு
சந்தோசமா வாழ்ந்திடலாம்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உழைப்பின் உன்னதம்

உழைப்பின் உன்னதத்தை
உணராதவர் இருக்க முடியுமோ.

உழைப்பதென்பது
உனக்குத்தெரிந்த செயலை
உனக்காகவே முதலில்
உள்ளன்போடு செய்வதே.

உள்ளன்போடு செய்தால்
திட்டங்கள் உருவாகும்.
திட்டங்கள் உருவாகினால்
ஆற்றல் பெருகும்.



ஆற்றல் பெருகினால்
செயல்திறன் பெருகும்.
செயல்திறன் பெருகினால்
உற்பத்தி பெருகும்.

உற்பத்தி பெருகினால்
செல்வம் பெருகும்.
செல்வம் பெருகினால்
செல்வாக்கு பெருகும்.

செல்வாக்கு பெருகினால்
புகழ் பரவும்.
புகழ் பரவி,
பூமியலுள்ள எல்லா உயிரினங்களுக்கும்
உன்னால் உதவ முடியும்.

உதவ முடிந்ததை
உழைப்பின் மூலமே
உயரச்செய்வோம்.
ஊர் போற்ற வாழ்ந்து வெற்றி பெறுவோம்!

கவிஞர் பானு அப்துல்லா

# வரைவின் மகளிர்

## அதிகாரம் : 92




அன்பிற்கா யல்லாது
பொருளுக்காய் விரும்பும்.
பொதுமகளிரின் இன்சொல்
ஒருவர்க்கு துன்பமேதரும்.

பொருளின் அளவறிந்து
அஃதடைதலளவும் அன்பாயிருக்கும்.
பொதுமகளிரின் இன்பத்தை
பொருந்தாமல் நீக்கல்நலம்.

பொருள்விரும்பும் பொதுமகளிரின்
பொய்யான தழுவல்.
பிணமெடுப்பார் இருட்டறையில்
அப்பிணந்தழுவல் போன்றதாம்.

அறமிழந்து பொருள்விரும்பும்
பொதுமகளிரின் இழியின்பத்தை.
அருளுடைய அறிவுடையோர்
பொருந்தாது விலக்குவர்.

மதிநலத்தால் மாட்சிப்பட்ட
அறிவுடையோர் பொருளுடைய.
எல்லார்க்கும் இன்பந்தரும்
மகளிரின் இழிநலன்தீண்டார்.

தன்னழகில் செருக்குற்று
பெண்மைவிற்கும் மகளிரின்.
புயத்தை புகழ்விரும்பும்
உயர்ந்தோர் தீண்டார்.

நெஞ்சை அடக்கியாளும்
ஆற்றலிலாதோர் தன்நெஞ்சில்.
பொருளுக்காய்ப் புணரும்
மகளிரின் தோள்பொருந்துவர்.

வஞ்சனையில்வல்ல பொதுமகளிரின்
முயக்கத்தை ஆய்ந்தறியும்.
அறிவிலாரை மோகினிமயக்கென
பெயருரைப்பர் அறிஞர்.


இழிந்தோர் உயர்ந்தோரெனும்
எவ்வகையினரையும் விலைக்காய்.
தழுவும்மகளிரின் மென்தோள்கள்
கீழ்மக்கள் புகுநரகமாம்.

பொதுமகளிரும் போதையும்
சூதாட்டமா மிம்மூன்றின்.
தொடர்புகளும் திருமகளால்
கைவிடப்பெற்றோரின் கூட்டுறவாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# கையறு நிலை

தினவெடுத்து திரியும் காடையர்
திக்கற்று ஒடுங்கும் கன்னியர்
நிழல் இழைத்த காட்சிப்பிழை
நீங்கா வன்மம் விதைத்து.
நுகர்ச்சி பண்டமா நங்கை.
பதர்கள் சுமந்த சூற்பை
பெரும்பழிச் சொல் சூழ.
திறனில்லா கொற்றவன்
கையறு நிலையில் குடிகள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அண்ணன்

அர்த்தம் அற்ற வாழ்கைக்கு அர்த்தமானவர்
வானத்துக்கு நிலவாக குடும்பத்து நிலவிவன்
வஞ்சனை இல்லா வரம்பிறசவம் இவன்
தந்தையின் பதவிக்கு தகுதியான தலைவன்
தாயின் அன்பிற்கு தாயாய் வந்தவன்
வீழும் போது தூணாய் நிற்பவன்
வீழாது காக்கும் ஊன்றுகோலும் இவன்தானே
சரித்திரம் படைத்திட சருகாய் உழைப்பவன்
சரித்திரக்காரியாய் தங்கையை மாற்றும் மந்திரக்காரன்
வடியும் கண்ணீருக்கு வலிமை சேர்ப்பவன்
வீணாகிப் போய்விடாமல் காவலனாய் காப்பவன்
பூவிற்கு கற்பாறையென்ற எண்ணத்தை விதைப்பவன்
செல்லச்சண்டையிலும் பிறரிடம் விட்டுக் கொடுக்காதவன்
மொத்தத்தில் இவனே பல உணர்வுகளின் கதாநாயகன்



கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# நவீனம் தேடும் நாகரீங்கள்

நவீன உலகில் நவீனமாக வாழ்கிறோம்
நாகரீகப் பார்வையில் நாங்களாகவே இருக்கிறோம்
காலம் செல்ல காலத்திற்கேற்ப உடைகள்
இங்கு வயது வித்தியாசம் இல்லை
கண்ணைக் கவர்ந்து தகுதியும் இழக்கிறது
அரைகுறை ஆடைகளில் மானம் எங்கே?
காற்றில் பறந்து சென்று கொண்டிருக்கிறது
முன்னோர்கள் உடைக்கு முக்கியத்துவம் தந்தனர்
இளசுகள் எல்லாம் பின்னோக்கிச் செல்கிறது
நாகரீகம் என்ற பெயரில் ஆங்காங்கே
கிழிந்து தொங்கும் ஒட்டுப் போட்ட
கால் சட்டையோடும் பட்டன் இல்லா
முழுச் சட்டையோடும் எங்கே செல்கிறது
உலகம் நவீனம் என்ற பெயரில்
அனைவரும் புதைக்குழியில் விழுந்து விடுகிறார்கள்
விழுவது எளிது எழும்புவது சிரமம்
மானமாய் வாழ ஒழுக்கத்தோடு வாழ்வோம்
உணர்ச்சிக்கும் உடைமைக்கும் மதிப்பு கொடுப்போம்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# படிக்கப்படாத புத்தகங்கள்

போகிக்கு தூசி தட்டி
தூக்கி எறியப்படாமல்
கோபம் இருந்தும்
கைகளால் கிழிக்கப்படாமல்
என்றும் பூஜை செய்து
பொட்டு வைக்கப்படாமல்
ஓரமாக போடப்பட்டு
யாராலும் புரட்டப்படாமல்
தனக்கு மட்டுமே தெரிந்த பல
புத்தகங்கள் என்றும்
இருக்கின்றன அனைத்து
பெண்களின் மனதிலும்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# வேண்டாம் இளமை

அன்பை தந்தே அனைத்தும் ஆனாய்
என்றும் துணையாய் இருப்பேன் என்றாய்
இன்பம் யாவும் எனக்கே தந்தாய்
நன்றாய் வாழ்வும் நடத்தலாம் என்றாய்

இரண்டு முத்தை ஈந்தேன் அதனால்
வரவாய் நேசம் வசந்தம் வீச
சுரமும் இசைத்தேன் சுகமாய் நாளும்
வரமாய் கிடைத்த வாழ்வும் வீழ

துன்பச் சிறையில் துவளச் செய்தாய்
முன்னே எமனும் மொழிந்த தாலே
என்னை நீயும் எப்படி பிரிந்து
சென்றாய் அவன்பின் திகைக்க வைத்து?

உந்தன் பிரிவோ உயிரைக் கொல்ல
எந்தன் வாழ்வும் இருளாய் போக
தந்தை இல்லா தத்தை இரண்டும்
சிந்திய கண்ணீர் சிதைத்ததே என்னை



இணையே உன்னை இழந்த பின்னால்
மணமே இல்லா மலராய் ஆனேன்
துணையாய் குடும்பத் தோளும் இல்லை
கணையாய் காமக் கண்கள் பாய

பருந்தாய் விழியும் பார்க்கும் பொழுது
நெருப்பாய் வாழ்வும் நீளுதே எனக்கும்
கருவில் சுமந்த கலைமான் இரண்டும்
மருகுமே நானும் மாய்ந்த பின்னே

தனியாய் இருப்பது சாபம் என்று
பணிய வைக்க பார்க்குதே உலகம்
குனிந்தால் நிமிர்ந்தால் குறைகள் சொல்லி
பிணியைத் தைக்குதே பிழைகள் புகுத்தி

எச்சப் பார்வை ஏன்தான் இங்கே
அச்சம் வருதே அனைவரின் மீதே
மிச்ச வாழ்வில் வேண்டாம் இளமை
கொச்சை எண்ணம் கொண்டோர் முன்னே.

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# மங்கல மாலை

காதலன், காதலிக்காக ஒளிந்திருப்பதாய்
செங்கதிரின் மொத்த அழகையும்
மேற்கில் மறைத்துக் கொண்டு
மேகத்திரை செறிந்தமையால்
மாயமாய் மறைகிறான் வெய்யோன்.

இருள் நிறைந்த அறைக்குள் ஒளிரும் மெழுகாய்
வெள்ளொளியைப் பூமியெங்கும் வீசிக் கொண்டு
தான் வந்து விட்டதாய் சேதி சொல்கிறாள் மதி.

மங்கை அவளை ஆசீர்வதிக்கிறாள் போல
மலர்கள் மெல்ல வீழ்த்திய இதழ்களை
பார் எங்கும் பரவச் செய்கிறது மெல்லிசைக் காற்று.

மாலைப் பனியில் மல்லிகை மணம் சிதற,
மேகங்களின் தூறல்கள் குளங்களிலே வளையல் வரைய
மஞ்சள் மாலை, மணம் வீசும் மங்கள நாளாய்.
காதல் மணமழையில் தொடங்கும் அழகிய கனாகாய்.



கவிஞர் அத்திபா ஹஸன், காத்தான்குடி

"ஏக்கம் பரிதவிப்பு"
இதைத்தவிர வேறு எதை
பெரிதாக பெற்றுவிட்டோம்
இந்த வெளிநாட்டு வாழ்க்கையில்!




கவிஞர் யோகலிங்கம் தமிழ்மாறன், இலங்கை

# புன்னகையின் பெறுமதி

கல்லுக்குள் நீரின் குளுமை
கண்களுக்குத் தெரிவதில்லை
உள்ளங்களில் புதைந்திருக்கும்
சோகங்கள் யாரும் அறிவதில்லை.

உலகம் ஒரு நாடகமேடை
நமது நடிபங்கு அற்புதம்தான்.
சோகத்தை மறைத்து
சொந்தங்களோடு வாழ்கிறோம்

சொல்லிக் கொள்ளாமலே
சந்தோஷங்களில் புன்னகைக்கிறோம்
வார்த்தை சற்றுத் தவறி விட்டால்
வாழ்நாள் குற்றவாளி ஆகிறோம்.

முன்னர் செய்த உதவிகள்
முழுதாய் மறந்து விடுகிறோம்
தவறென உணர்ந்தும்
மன்னிக்க மறுத்து விடுகிறோம்.

பின்னர் வந்த சொந்தங்களால்
பிடிவாதம் களைய மறுக்கிறோம்
அத்தனையும் பார்த்துக்கொண்டு
அமைதியாக நகர்கிறோம்.

புரியாத உலகில் இனிப்
புரிதல் பஞ்சமென மௌனிக்கிறோம்
அவ்வப்போது பழையன மறந்து
அமைதியாய்ப் புன்னகைக்கிறோம்



அநீதிகள் எனத் தெரிந்தும்
அவனிடம் ஒப்புவித்து விலகுகிறோம்
எல்லோருடனும் சேர்ந்து
நாமும் ஒருவராய் புன்னகைக்கிறோம்

பாவங்கள் மன்னிக்கப்பட்டு
பயண இறுதிவரை புன்னகைப்போம்.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ்

# ஹைக்கூ - துளிப்பாக்கள்



மிகுந்த கவனத்துடன்
பற்ற வைக்கிறேன்
கடைசி தீக்குச்சி
**

பூங்காவில் பனிமழை
இன்னும் குறையாமல் இருக்கிறது
பூக்களின் மணம்
**

விரல்களின் கலையைக்
காட்டிக் கொடுத்து விடுகிறது
முற்றத்து மாக்கோலம்
**

பட்டுப்போன மரம்
உயிர்ப்பாய்த் தெரியும்
படர்ந்த கொடியின் பூக்கள்
**

சிறு பறவைகள்
உணவைப் பற்றிக்கொள்கின்றன
சிறு விரல்கள்
**

குளத்தில் நீரலைகளை
உருவாக்கிக் கொடுக்கின்றன
படகின் துடுப்புகள்
**

அழிக்கப்பட்ட காடு
அதோ தூரத்தில் தெரிகிறது
மின்கம்பத்தில் குருவிக்கூடு

கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# வேண்டாமே

ஏழ்மையின் பிடியில்
போலி கௌரவம் வேண்டாமே
தூய அன்பில்
துரோகம் வேண்டாமே

நட்பின் வரிசையில்
பாகுபாடு வேண்டாமே
கற்ற கல்வியில்
பெருமை வேண்டாமே

மனித வர்க்கத்தில்
ஏற்றத்தாழ்வு வேண்டாமே
பெற்ற செல்வத்தில்
ஆடம்பரம் வேண்டாமே

வெற்றியின் களிப்பில்
ஆணவம் வேண்டாமே
தோல்வியின் துயரில்
துவண்டிட வேண்டாமே

மதிக்கா இடத்தில்
இருப்பு வேண்டாமே
புரிய மறுக்கும் மனதினிடத்தே
வீண் விவாதம் வேண்டாமே

ஆக மொத்தமாய் இறைவன் அருளில்
திருப்தியின்மை வேண்டாமே



கவிஞர் ஹாஸ்மியா தாஹா, கெக்கிராவ-கலாவெவ

# ஆற்றங்கரை

கண்ணாடிக் குவளையில்
புகுந்துதான் என்ன செய்யும்
ஒளிக்கதிர்.

தெள்ளத் தெளிவாக நதிநீர்
கூழாங்கற்களை உரசும்
செம்மீன்கள்.

விடை பெற்ற சருகு
வீரியம் குறைந்த ஒளியில்
நிலாவைத் தொடுகிறது.

ஒற்றைக் காலில் தவம்
கண்டுகொள்ளாமல் செல்லும்
மீன்கள் கொக்கை.

இடை விடாது காற்று
எப்படி பறிப்பது
ஆற்றங்கரையில் கிளையில் பூ.

துள்ளித் தள்ளி பாறைகள்
சுழன்று கொண்டிருக்கும் மீன்கள்
தூண்டில் இல்லாதபோது.



கவிஞர் மூ. மணி திருமுருகன், சங்கரன்கோவில்


# மனமே!

உயரப் பறக்கும் பட்டம்
அதன் பெருமிதம் அதன்
வண்ணத்தில்?, அமைப்பில்?
மத்தியில் அமைந்த வில்லில்?
வளைந்து நெளிந்து மேலேறும் லாவகத்தில்?
இல்லை! இல்லை!

அதன் மிதப்பு
சாரைப்பாம்பென
துள்ளி ஏறும்
நொய்ந்து தொய்ந்த
நுண்மை மிகு சன்னமான,
நீண்ட நீள் வால்!
இல்லை; இல்லை!

பறக்கும் பட்டத்தின் உயரும் சூக்குமம்
மாஞ்சா கயிறு
பிடிக்கும் கையில் அல்லவா?
வால் அறுந்த பட்டத்தை
கையகப் படுத்தலாம்
கயிறு அறுபட்ட பட்டம்
ஒரு போதும்
கையில் வராது.

மனிதனின் உயரம்
நிலத்தோடு இணைந்து
பிணைந்திருக்கும் வரைதான்;
இதை நினைவு கொள்;மனமே!




கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# ஐக்கூ

ஊர்கூடி இழுக்கின்றதை
தனிமனிதன் இழுக்கின்றதாக பாடுகிறது
தனிமனித வழிபாடு

சாமிப்படம் போட்டு
வாக்குச்சீட்டோடு வருகின்ற பிரசாதச்சீட்டு
அறமில்லா கையூட்டு

பகுத்தறிவுக்கு எதிராக
ஏவப்படுகின்ற நவீன ஒடுக்குமுறை
மூடப்படுகின்ற புத்தகச்சாலை



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# மழைக்காதலர்கள்

மழை எனும் மகத்துவம் அறியாது
சில்லென்ற காற்றின் மகத்துவம் தெரியாது
குடை கொண்டு மறைப்பவர்களுக்கும்
வீட்டுக்குள்ளே முடங்குவோருக்கும் தெரிவதில்லை

மழை என்றால் மத்தாப்பாய் புன்னகை செய்து
வருண பகவானுடன் உறவாடி
ஆடிப்பாடி களித்து மழைதனை கொண்டாடி வரவேற்கும்
மழைக்காதலர்களின் மகிழ்வு!


மரம் நட்டிடுவோம் மழைதனை பெற்றிடுவோம்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நாளைக்காக

மோசமான
சில நாட்களும்
கடினமான
பல முடிவுகளும்
குழம்பச் செய்து
அச்சுறுத்தினாலும்
உறுதியுடன்
தொடர்ந்து செல்லுங்கள்
அதுவே
நாளைய வளர்ச்சியின்
உரமாகலாம்.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# உறக்கம் இல்லா கனா



உறக்கமே இல்லா கனா
இறக்கமே இல்லாமல்
என்னைப் படுத்துகிறது.

விதர்க்கம் செய்தே
என்னை இம்சை செய்கிறது.
பூவிதழ் வாசனையாய்
என்னை கொய்த்தெடுக்க பார்க்கிறது.

உதிரம் சிந்தும் காயம் போல
கண்ணீரை தரப்பார்க்கிறது.
தாயாய் மாறி என் தூக்கம் பறித்து
அரவணிக்கிறது.

தொலைத்தூர உறவின்
வருகைக்கான காத்திருப்பென
என்னை இம்சிக்கிறது..

மொய் இல்லாது செல்ல முடியாத தோழியின்
திருமணம் போல என்னை அல்லாட செய்கிறது.

வரிகளை எழுதி விட்டேன்
வாழ்த்தும் கிட்டி விட்டதே
பரிசெனசான்றுதலை பெற
பணமொன்று குறுக்கென நிற்கிறதே.

பண வைப்போ நாட்டுக்குள்
அசௌகரியமென இருக்க
உதவுவார் யாரென இன்றியே
எனக்குள் புழுங்குகிறதே.

பாசமென்றவருக்கும் நேசமென்றவருக்கு
மனம் வரவில்லை
மனதார முன் இறங்கி செய்திடவென அறிந்ததில்.
தூக்கத்தை பரித்த கனா என்னை வாட்டுதே.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# தூரம்

பிடித்தவர்களை
தூரமாக வைத்து விடுகிறது காலம்,
அந்த தூரம்
பிடித்தவர்களின் நலனுக்காக என்றால்,
அதை நாம்
சுகமாக ஏற்றுக்கொள்ளதான் வேண்டும்.



கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

# சீவமே–சீவனே

சிவ நிலை நோக்கும் சக்தியே
சக்தி நிலை நோக்கும் சிவமே
சிவ நிலை நோக்கும் சித்தமே
சீவ நிலை கேட்கும் முக்தியே

சித்திரம் தந்தது அறியவோ சிவமே
நித்திரை நிலையை கலைத்தாயோ சிவமே
நித்திய சக்தியை தந்திட்ட சிவமே
மத்தியில் முக்தியாய் நிற்கிறாய் சிவமே

அறிவென்னும் ஒளியே அரிதான ஒன்றாய்
அறியவே ஒளிர்ந்தாய் அறிவாய் நிறைந்தாய்
அறிவை அறியவே அறிவை திறந்தாய்
அறியாமை என்னும் இருளையும் தந்தாய்

அறிந்திட அறிந்திட ஆற்றலும் கொண்டாய்
அறிய அறியவே அண்ணியம் ஆனாய்
அறிவென்னும் சோதியால் அருகாமை ஆனாய்
அறிந்து அறிந்தே அறமாய் திரிந்தாய்

அறமாய் புறமாய் வந்தாய் சிவமே
அறத்தினில் உணர்வாய் உதித்தாய் சிவமே
அறத்தால் அண்டம் விதைத்தாய் சிவமே
அறமே அந்தத்தின் சக்தியோ சிவமே

பூதத்தில் பூரணம் தந்தாய் சிவமே
புறத்தில் புண்ணியம் சேர்த்தாய் சிவமே
பேத நாமங்கள் பூண்டாய் சிவமே
வேத நெறிமுறைகள் கொண்டாய் சிவமே



நிலையாய் நிலையாய் நீயே சிவமே
நித்தியம் சத்தியம் நீயே சிவமே
நிலைத்ததும் நிலைப்பதும் நீயே சிவமே
நினைவின் நிலையும் நீயே சிவமே

நிற்பதும் கடப்பதும் நீயே சிவமே
தின்றதும் செரிப்பதும் நீயே சிவமே
தந்ததும் பெற்றதும் நீயே சிவமே
கொன்றதும் புதைந்ததும் நீயே சிவமே

கவிஞர் நூருல் நஃமா அனஸ்

# அவள் ஓர் தொடராத தொடர்கதை



அன்று அவள் ஓர் தென்பட்ட தென்றல்
இன்று அவள் ஓர் வலிகளின் தூண்டல்
அவள் ஓர் வாழ்க்கையில்
இன்பமும் துன்பமும் கடந்து வரும் காகித மேடை
யார் யாரோ அவள் மனதில் புண்பட்ட புன்னகை அன்று
இன்று அவள் மனதில் புண்பட்ட விதியின் பிம்பம்
நடக்கும் பாதையில் அவள் ஓர் அருவி
மானிட பாதையில் அவள் ஓர் சுற்றறிவி
துதிக்கும் தூரிகையில் அவள் ஒரு இன்பம்
துன்பப்படும்போது அவள் ஓர் மதிப்பிறை
வீதியோரம் அவள் ஓர் தூக்கணாங்குருவி
கூட்டை விட்டு பிரியும் போது அவள் தனிமையின் அருவி
வலியும் வேதனையும் அவள் சிந்தனையின் பின்னணி
அவள் யாரோ ஒரு மனதில் ஒப்பிடாத காகித கூந்தல்
எங்கள் மனதில் ஒப்பிடாத மாந்தல்
மறுபடியும் மறுக்கிறது என் மனம்
அவளை மீண்டும் மீண்டும் தீண்டும் போது
அவள் யாரோ நான் யாரோ அவளுக்கு
ஒரு தொடர்கதை எழுதிய என் பின்னணி
சொல்ல முடியாத கற்பனை சொல்லி முடிந்த தொடர்கதை
அவளும் நானும் சகோதரத்துவத்தின் முன்னணி
அவ்ஊராரின் அது பின்னணி
இவள் வலி வேதனையை அறிந்த முன்னோடி
அவள் கூற முடியாத ஓர் பாஞ்சாலி
யார் எதற்கு ஏன் என்று
கேள்விகளின் பின்னணியில் அவள் ஒரு கூற்று
அவள் வாழ்க்கையின் பிம்பம் எங்கே செல்கிறது
தொடர முடியாத பின்னணியில் நானும் ஒரு பிம்பம்
என் நெஞ்சத்தை பிளந்த சகோதரத்துவம்
அன்பு வலையின் மதிப்பிறை பானுப்பிரியாவின் பாச
பண்பாடும் பண்பட்ட மனப்பாடும்
இன்று அவள் வாழ்க்கையை தொடர செய்தது
அதை என்னை எழுத செய்தது தொடரும்
அவள் ஒரு தொடராக தொடர்கதை
அன்பின் பிரிய பானுமதி அவளின் தூரிகை வேகம்
எங்கெங்கே காணும் வரை நாங்கள் கடந்து செல்கிறோம்
அவளின் வாழ்க்கையின் பின்னோட்டத்தை.

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# மனிதம் வளரட்டும்

நன்மொழியின் வழி இனிமை பிறந்தது
நன்கவிஞனின் வழி கவிதை பிறந்தது
நன்புத்தகத்தின் வழி மனிதம் பிறந்தது
மனிதனிடம் பிறக்கட்டும் மனிதம் வளரட்டும்



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)



அகர முதல

# வெயில்

வெயிலின் மெதுவான ஓட்டம்
சாலைகளில் பாதயாத்திரையாய்

குளிர்பானங்கள் தூக்கம் கலைந்து
கோப்பைகளில் சுறுசுறுப்பாய்

வெயிலின் வியர்வை துளிகளில்
மனிதம் வறட்சியாய்

மரங்களை தின்றதால் நிழல்கள்
இன்று நிர்வாணமாய்

காடுகள் காணமல் போனதால்
வெப்பம் ஊருக்குள் ஊர்வலமாய்

வெப்பத்தின் நடைபாதையில்
மனிதம் பாலைவன பாவங்களாய்

இலைகள் அசையாத உலகம்
இங்கே இறந்த காலங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# மாமனின் வருகை

பட்டணத்து மாமனின்
வருகை அறிந்தவள்
ஒற்றை சடை பின்னல் முடிச்சு
மாமனை எண்ணி எண்ணி
கட்டிய மல்லிகை சூட்டி
முத்துமணி கழுத்தில் தொட்டு உரச
மையிட்டு.. கூர்மையாக்கி..
வழி மேல் விழி வைத்து
மாமனை எதிர் நோக்க.
தண்ணி குடத்தை இடை இடுக்கி
அன்ன நடை நடந்து
மாமனின் வீடு கடக்க
மாமனின் குரல் கேட்க
இடை நழுவி குடம் விழுந்து நெளிய
வெக்கம் கொண்டவள்
பாவாடையை அள்ளி சொருகி

கொலுசு ஒலியில் கைவளையல்
சிணுங்க  ஓடினாள்



கவிஞர் சு. பிரகாசு மேரி, உடப்பன் குளம்

# பசி 'தீ' அணைப்போம்

இளமையில் வறுமை வாழ்வில் அது கொடுமை
இருப்பவர் இல்லாதவர் பகிர்ந்து வாழும் காலமே
பசி என்னும் கொடுமை உலகினில் இல்லையே.

பதுக்கள் பேர்வழிகளும் வரியேய்ப்பு திருடர்களும்
சேர்ந்து செய்யும் சூதுசெயல் பண வீக்கம் என்ற
சமூகத்தின் சீர்கெட்ட நிலைக்கு
ஏமாற்று மனிதர்களின் சீர் கெட்ட செயலே.

ஊழல் என்னும் பெரும் பேய் வளர்ந்துவிட்ட விருட்சமாய்
வேர் விட்டு விழுதாய் கிளை பரப்பும் கொடுமை
சமூகத்தில் களையாய் பெருகிவிட்ட கொடுமைகளை
வெட்டி எரியும் காலமே சமூகத்தின் பெருமை
உயரும் அது உண்மையே.

வளரும் பயிரான சிறார்கள்; வறுமையில் வாடும் கொடுமை
இளமையில் வறுமை; கொடுமையிலும் கொடுமை
பெற்றோர் இழந்த குழந்தைகள்;
ஏழை குடிசையில் வறுமை என்னும் கொடுமைகள்
இனியும் தொடர அனுமதியோம்.

நல்ல உள்ளம் கொண்ட மனிதர்கள்
சமூக ஆர்வலர்கள் இதயத்தில் இரக்கம் என்னும்
உயர்ந்த குணம் கொண்ட கடவுள் மனம் படைத்தோர்
மனம் வைத்தால் மாற்றம் வரும் பசி *தீ* என்னும்
கொடுமை தீரும் சமூகம் மிளிரும் வளமான வலிமையான
புதியதோர் உலகம் புலரும் இனிதே!




கவிஞர் ஜேப்பி @பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# சங்கீதம்

இசைக்கு மயங்காதோர் உலகினில் எவரும் உண்டோ!
யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்று
பாடிய பல சங்கீத வித்வான்கள் பலரும் உண் டே!
கர்நாடக சங்கீதத்தில் சாதனை படைத்தோர் பலரும் உண்டே!

கன்னட உலகில் புரந்தரதாசர் என்ற மாபெரும் மேதை
இசையால் பல சாதனைகளை செய்து
ஆண்டவனையே மகிழ்விக்க செய்தாரே!
தெலுங்கு மொழியில் அன்னமாச்சார்யா கோவிந்த நாமத்தை
32,000 கீர்த்தனைகள் பாடினார் என்று சொல்லப்படுகிறது.
பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று
முதன் முதலில் வகுத்துக் கொடுத்தவர் இவரே!

12000 கீர்த்தனைகள் மட்டுமே
கிடைக்கப்பெற்றது என்று சொல்லப்படுகிறது.
பிறகு ஆயிரம் மட்டுமே கிடைத்தது என்கிறார்கள்.
எம்எஸ் சுப்புலட்சுமி அம்மா அவர்கள்
800 கீர்த்தனைகள் பாடினார் சொல்லப்படுகிறது.
சங்கீத மும்மூர்த்திகள் என்று சொல்லப்படும்
தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள்
இவர்களின் கீர்த்தனைகள் இன்றும்
ஒலித்து கொண்டேதான் இருக்கிறது.
இசை என்றைக்குமே காலம் காலமாக
வாழ்ந்து கொண்டிருக்கும்
ஜீவாத்துமான தெய்வீக கலையே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# பூவெல்லாம் உன் வாசம்

(அந்தாதி கவிதை)



பூவெல்லாம் உன்
தென்றலோடு மோகம்!
மோகமான உன்னால்
வாடுது என் தேகம்!

தேகமிருந்தும் வாடுது
என் கவியெழுத்து!
கவியெழுத்துகளின் மாநாட்டில்
விவாதமானது உன்னழகு!

உன்னழகில் பயணங்கள்
திசைமாறி போகும்!
போகும் பாதைகளும்
உன் முகவரியைத் தேடும்!

தேடும் வானிலவுக்கு
விண்மீனே துணை!
துணையாக என்னோடு
இனியாவது இணை!

இணையான என்னவளே
நீயே என் அந்தாதி!
அந்தாதி தேடும்
அழகின் அகராதி

அகராதி அறியாத
தமிழ் நான்!
நான் வாழும்
கற்பனை நீ!

நீயின்றி எனக்கேது
தமிழ்த்தாயின் நேசம்!
நேசிக்கும் நீதானடி
என்னுயிரின் (சு)வாசம்!

கவிஞர் அனல் நிலவன், திண்டுக்கல்

# கண்ணாடி

முகப்பூச்சு தாண்டி
அகத்தை மட்டும்
பிரதிபலிக்கிறது

கூறும் அறிவுரைகளை
சாமர்த்தியமாக
என்னை நோக்கி
திருப்பி அனுப்புகிறது

புன்னகையின்
அளவுகோல்களை
அவ்வப்போது
நீட்டச் சொல்லி
அடம் பிடிக்கிறது

நவயுக நாகரீகத்திலும்
திலகங்களின் வடுக்கள்
சுமக்கிறது

என் உயரம் மட்டுமல்லாது
என் எண்ண உயரங்களையும்
பறைசாற்றும் ஆசானாகிறது
என் வீட்டுக் கண்ணாடி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அப்பாவின் மகள்

உச்சி முதல் பாதம் வரை முத்தமழையிட்டு!
பிஞ்சு பாதம் நோகுமென உன் நெஞ்சில் மிதக்கவிட்டு!
கருவில் சுமந்த தாயை கூட மறக்கும் அளவில்
நினைவுகள் கோடி தந்தாய்!
தோளில் தூளி கட்டி!
மீசை முடியில் ஊஞ்சல் கட்டி!
மார்பின் மேல் மேசை அமைத்து!
ராணியாக அமர செய்து
நகர்வலம் சென்று வந்தாய்!
ஆசைப்பேச்சு அளவற்று பேசிய நீ
அதட்டி அரை நொடியும் பேசியதில்லை!
நீ பசியால் வாடிய போதிலும்
என் வயிற்றை நிரப்பாமல் விட்டதில்லை!
நான் சிரிக்க நீ கோமாளி ஆனாய்!
என் மதி சிறக்க நீ கடனாளி ஆனாய்!
இறுதி வரை வேண்டாம் இத்துடன் போதுமென்று
விடைபெற்று விட்டாய்!
இதுவரை ஆதரவாக நீ!
இனிமேல் ஆதரவாக உன் நிழல்!



கவிஞர் தி. கமலவேணி, மாணியம் ஆடூர்

# மறைத்தலும் அழகு மறைதலும் அழகு



அதிகாலைச் சூரியன் அவனியில் அவதரித்து
பின் அந்தி மாலையில் தன் ஒளித் தூரிகையால்
ஒவ்வொரு நாளும் தான் வரைந்த ஓவியத்தை பார்த்து
ரசிக்காமல் பாதியிலே மறைதல் அழகு!

இரவின் இருளை நீக்கி நிற்கும்
நிலவின் உருவை வெண்மேகங்கள் நான் நீ என
போட்டியோடு மாறி மாறி மறைத்தல் அழகு!

கதவு ஜன்னல் திறந்திருக்க வீட்டினுள்ளே பார்வை
திருடன் நுழையாதிருக்க வண்ணத்திரைகள்
காற்றோடு சண்டையிட்டுக் கொண்டே மறைத்தல் அழகு!

மண்ணின் மாணிக்கங்களாம் மாதர்கள் - தம்
அழகிய வதனத்தை
அந்நியப் பார்வைகளை விட்டும் தடுக்க
ஆடை கொண்டு முழுதாய் மறைத்தல் அழகு!

அடுத்தவன் குறையை இம்மையில் நீ மறைத்தால்
படைத்தவன் உன் குறையை மறுமையில் மறைத்தல் பேரழகு!

உலகின் சமநிலை பேணியே இறை நியதியின் முன்னே
உயிர்கள் எல்லாம் வாழ்ந்து விட்டு
இயற்கை எய்தி மறைதலும் அழகு!

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# சின்னஞ்சிறு வயது



கவலையில்லா வயதிலே
கவனம் சிதறா நினைவிலே
கண் அயரும் வேளையிலே
கனாவோடு சேர்ந்து

கதையோடு காரண நீதிகளும்
கசையடி வாங்கிய திருடர்களையும்
கங்கை ஏந்திய சிவனையும்
கசிந்துருகும் முதியோர் நிலைமைகள்

கடல் மலை தாண்டிய தேவதைகள்
கருவிருளில் பூதங்கள்
கடவுளின் திருவிளையாடல்கள்
கலை வண்ண ஓவிய உலகங்கள்

கல் மண் தோன்றிய விதங்கள்
கவிநயத்தோடு தெனாலிராமன் நகைச்சுவைகள்
கழியடி வாங்கிய முட்டாள்கள்
கற்றுக்கொடுத்ததே பல நல்போதனைகளை

கற்பித்தனரே வீட்டில் தாத்தா,பாட்டிகளும்
கன்னத்திலே முட்டுக்கொடுத்து
கதையோடு லயித்த மழலைக்காலமும்
கனவாகி கானல் நீரானதே

கலியுக சிசுக்களுக்கும்
கரமிரண்டிலும் அடங்காத கைபேசியாலே
களை முளைத்து கலையிழந்ததே
கனிவான சின்னஞ்சிறு வயது நாட்களுமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# எதிர்காலம்

எங்கோ கேட்கும்
குரலின் சத்தம்
மேடையில் சலசலப்பு
நாளை என் கையிலென்ற இறுமாப்பு

தார்ப்பாயை சுமந்த
ஓட்டைக் குடிலில்
புகையும் புகைச்சல்
விண்ணிலே கோலம்
வரைந்து பறக்குது

ஓலைப்பாயின்
கிழிசல்கள் இன்றோ நாளையோ
நான் விடைபெறும் நாள் என்றது
அசராத அவளின் கசங்கிய
கொண்டையிலே துணுக்கு
மல்லிகையும் மனம் விட்டு பேசியது

என்ன ஒளிமயம் இங்கு
என்று காற்று நின்று பார்க்கையில்
வெஞ்சனம் இல்லாத
வெறுங்கஞ்சியின் அன்பு கண்டது



எதிர்காலமென்பது எதுவுமில்லை
நேற்றின் மிச்சத்தை
மனக்கதவில் அடைத்து
இன்றின் தொடக்கத்தை
இனிமைக்குள் நிறைத்து

நாளையென்பது
நலமுடன் பிறக்கட்டும்
விடியில் ஒளியில் வில்லேந்தும் விழிகளே
நம்பிக்கை சுடரை நகர்த்தாமல்
வாழ்வோம்.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# விதை



கை எட்டா தூரத்தில் மலர்ந்து
கல்லடி படாமல் காய்த்து
கனியாகி வியபாரியின் பழக்கூடையிலிருந்து
சந்தைக்கு பயணம்
சாமானியன் வாங்கி வன்றான் மஞ்சப்பையில்
இரவு அனைவரும் ருசிக்க
சாறு தனி, சதை தனி சுவைக்க
மிஞ்சிய நானோ
குப்பையின் கிடக்க
இரவு கொட்டிய மழையின் ஒடை நீர்
என்னை அடித்துச் செல்ல,
தோட்டத்தில் பதிந்துவிட்டேன் மண்ணில்
ஒரு சில நாள் பின்னே மண் மூட்டி
மேவே இரு வித்திலை கொண்டு நான் எழ
பண்ணையார் பார்வை என் மேல் பட வாடா ராமா
அந்த செடியை நட்டு பராமரி வீட்டு தோட்டத்தில்,
வேண்டாம் என்று எறை குப்பையில் வீசிய
அந்த சாமானியனிடம் சொன்னேன்
அவனிடம் நான் வீழ்வேன் என்று நினைத்தாயே

இப்படிக்கு கனியின் விதை

கவிஞர் கார்த்தி, கோவை

# முட்டாள்கள் மத்தியில்

அழுகைக்கு
மொழி வரைய முயல்கிறேன்.
வலி உணரா முட்டாள்கள்
மத்தியில் அழுதிட.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# இட்டலி மரவு

இட்டலி மாவை இயன்றவரை அரைத்து
பெரிய பானையில் பிரிட்சில் பதுக்கி
பதமாய் இட்டலி தோசை சமைத்து
நேசமுடன் பிள்ளைக்கே ஊட்டி சிறப்பாரே



உற்றார் உறவினர் மகிழ்ந்து போற்ற
பாச உணவை நைந்து தருவாரே
ஒருநாள் உணவை அடுத்தநாள் தருமே
அரும்பிய விஞ்ஞான வீட்டின் சாதனம்

நான்கு நாளுக்கு பாதுகாத்த உணவும்
நாளொரு வியாதியை நிச்சயம் தந்திடுமே
ஓசோன் படலத்தை ஓட்டையிடும் குளிர்சாதனமே
வீட்டு சமையலறை நடுவில் நாட்டாமைதான்

வயிற்று குடலை நண்பனாய் அரிக்குதே
வேலைசுலபம் விரும்பும் தலைவியே
வியாதியை பிள்ளைக்குத் தர துணையாகலாமா
வேண்டியதை சமைத்து வேண்டாததை விலக்குவோம்.

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# வீழ்வேனென்று நினைத்தாயோ

வேடிக்கை பார்க்கும்
வேடவர் உலகம் இது
விழுந்தவன் எழும் முன்
எழும்புகளை உடைத்தெறியும்

வாரணம் ஆயிரமாய்
வாழ்கையை மாற்றிட
வார்த்தைக்குள் அடங்காத
விடாமுயற்சி உண்டெனில்
வெற்றிக்கனி நெற்றிக்குமுன்

வார்த்தையால் வதைக்கும் உறவுகள்
வாய் வெடிக்க பேசிபோகும்
அயலவர் கூட்டம்
ஆசையை அவமதிக்கும்
அன்பான துணைகள்

அனைத்து திறமையையும்
புலனடக்கும் திருமண வைபோகம்
கண்ட பின்பும் நான்
சிறை புகுந்தேன் என்று நினைத்தாயோ

சிலைகொண்ட உருதனை
உயிர் தந்து ஈண்டவள் நான்
மழை வெள்ளமென என்னை
அனையுடைக்க நினைத்து விட்டால்
அக்கணமே வீழ்வேனென்று
நினைத்தாயோ துளிர் விடும்
மரமென விருட்சம் கானும்
எனை வானமும் வழி மறைக்காது



கவிஞர் பரிமளா மணி, இலங்கை

# உறங்காத கண்கள்!

இரவில் கதைகேட்டு உறங்கினோம் சிறுவயதில்!
பருவங்கள் வெவ்வேறாய் மாறிடும் காலங்களில்
உறக்கத்தைத் தொலைக்கின்றோம்! காரணங்கள் பலவேறாய்!
தேர்வில் வெற்றிபெற தொலைக்கின்றோம் உறக்கத்தை!
அரும்பிடும் காதலால் அதிகரிக்கும் ஏக்கங்கள்!
உறங்காத இரவுகள்! நிலவொளியில் நிசப்தங்கள்!
பிரிவுத் துயரென்றால் பிரிந்திடும் உறக்கமதும்!
பிறந்த குழந்தையினை பேணிடும் தாய்மார்கள்
இரவில் தூக்கத்தை இழக்கின்றார் சேய்காக்க!
உறவுகளின் இறப்பினால் உருவாகும் சோகத்தால்
இரவுகளில் உறக்கம் இருக்காது பலநாட்கள்!
மாய்க்கின்ற தன்மைத்தாம் மனக்கவலை மிக்கோரும்
நோய்களில் கொடும்பிடியில் சிக்கித் தவிப்போரும்
மருந்துகளின் துணையாலே உறங்கிட முயன்றிடுவர்!
குறிக்கோளை அடைய ஏக்கமுடன் முயல்வோரும்
திறமை இருந்தும் வாய்ப்பின்றித் தவிப்போரும்
சேர்த்த பெரும்பணத்தைக் காத்திடத் துடிப்போரும்
உறக்கமில்லா இரவுகளை எதிர்கொள்ளல் இயல்பாகும்!
பொறாமை வஞ்சகத்தால் பிறர்வாழ்வைக் கெடுப்போர்கள்
யாருக்கும் தெரியாமல் குற்றம் புரிந்தோர்கள்
உறுத்திடும் உள்ளத்தால் உறக்கத்தைத் தொலைத்திடுவர்!
உறவுகள் யாருமின்றி தனிமையில் உழல்வோர்கள்
தீராதோ வேதனைகள் என்றெண்ணித் தவிப்போர்கள்
உறங்காத விழிகளொடு உழன்றிருப்பர் வாழ்வினிலே1
உறக்கம் மனிதருக்கு நலன்காக்கும் மருந்தாகும்!
உடல்நலன் உள்ளநலன் இரண்டிற்கும் உறக்கமே
தொடர்பாகும்!உரியகாலத்தே உறங்கி ஓய்வெடுப்போம்!
இன்னுறக்கம் கைகூட இன்பமான வாழ்வமையும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# எனில்

விருப்பம் எனில் இலக்கு
செயல் எனில் திட்டமிடல்
வெற்றி எனில் உழைப்பு
குழப்பம் எனில் யோசிப்பு
புதியவை எனில் ஆர்வம்
பேச்சு எனில் முன்தயாரிப்பு

உவகை எனில் அனுபவித்தல்
சோகம் எனில் பகிர்தல்
மனிதம் எனில் உதவுதல்

வியப்பு எனில் புருவம்உயர்த்தல்
எதிர்பார்த்து நடக்கையில்
கட்டைவிரல் உயர்த்துதல்

நம்பிக்கை கொள்வது எனில்
முந்தையவைகளை ஞாபகம்கொள்ளல்



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கண்ணீர்த்துளிகளில்
சிதறுகின்றன
உனைப் பற்றிய கவிதைகள்
*

சுவாசச் சிக்கல்
உன் வீட்டில்
என்னை உருட்டுகிறாய்
*

என் இருப்பிடம்
உன்னிதயமாகிறது
உன்னைக் காண்கையில்
*

எத்தனை தோல்வி
ஒரே ஒருமுறை
உன்னிடம் பேச.
*

நோயில் நான்
கண்ணீரில் உன் மருந்து
உறக்கமில்லா நீ
*

சோலையில் நுழைகிறாய்
மொட்டுகள் மலர்கின்றன
உன் விரல் தீண்ட
*

என் மனவாளியில்
அன்பு நீரூற்று
இன்பக் கேணி நீ
*

இடம் மாறினால்
பொருள் மாறுமா
பார்வை அர்த்தங்கள்
*

உன்னுடன் பேசிய
நொடிப் பொழுதுகள்
அழகான நாட்கள்
*

நம் சந்திப்புகளில்
பொறாமைப்படும் காலம்
வேகமாக ஓடி



கவிஞர் இளையவன் சிவா

# பஞ்சதன்



கோபத்தை தூண்டும்
சிலரின் மௌனம்
***

வாயை கட்டினால்
வயிற்றில் கட்டு வரும்
சிக்ஸ் பேக்ஸ்
***

டைல்ஸ் கட்டங்களை
சில்லுப்பெட்டிகளாய் கொண்டு
விளையாடுகின்றனர்
ஸ்மார்ட் வொர்க் குழந்தைகள் :
***

கருப்பு வெள்ளை கட்டைகளில்
காலத்திற்குமான ஒலி
ஹார்மோனியம்
***

கிங் ஆப்
ப்ரோபெட்ஸ்
கண்ணதாசன்
***

நிலங்களின்
திமில்
மலை
***

பூனை மீசையை
ஊசியில்
கோர்த்து பார்க்க ஆசை

பூனை மீசையை
ஊசியில்
கோர்த்து பார்க்க ஆசை
***

உச்சா வருகிறது ,
நான் தந்தையிடமும்
தந்தை என்னிடமும் கூறும்
இடைப்பட்ட காலம்
வயோதிகம் எனப்படும்
***

என் தந்தை
உயிருடன் இருக்கும் வரை
எனக்கு வசந்த காலம் தான்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# மதியிசம்

## (சிறுகதை)

புதுக்கோட்டையில் சிறுவனாய் இருக்கும் போது நான்காம் வகுப்போ, ஐந்தாம் வகுப்போப் படித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன், வீட்டுக்குப் பக்கத்துலேதான் பள்ளிக்கூடம், அதனாலே ஒரு நாளும் மதியச் சாப்பாடு எடுத்துச் செல்ல மாட்டோம்,
அன்னைக்கு மதியம் வீட்டுக்குச் சாப்பிட வரும் போது அம்மா சொன்னாங்க,

"ஏல மதி பள்ளிக்கூடம் முடிச்சதும் லிங்கம்மாக்கா வீட்டுக்குப் பக்கத்துல இருக்கம் சீட்டுக்காரப் பாப்பமாக்கா வீட்ல சீட்டுக் குலுக்குவாங்க, ஒரு எட்டுப் போய் பார்த்துட்டு வந்துருலே "ன்னுச்
சொன்னாங்க.
'சரிமா, பள்ளிக்கூடம் முடிந்ததும் நானும் சீட்டுக்குலுக்கல் நடக்கும் அந்த அக்கா வீட்டுக்குச் செல்கிறேன்."

சும்மாச் சொல்லக் கூடாது, சரியானக் கூட்டம், எனக்கு அந்த வயசுலே அவங்க வீட்டுக்கு உள்ளேச் செல்லக் கூட முடியலே, நான் வெளியே தான் நிற்கிறேன், ஏதோ ஒரு சிறுக் குழந்தையைக் கூப்பிட்டு அந்த தட்டு சீட்டை எடுக்கச் சொல்கிறார்கள், அதன் பின், முடிவு அறிவிக்கப் படுகிறது

"இயேசு துணை மதிராஜ் " என்று சொல்லும் போது எனக்கும் காதில் விழுந்தது கூடவே இரவு ஆராதனைக்கு வேதக் கோவிலின் முதலாம் மணியின் சத்தமும்,
அந்த யோனா பெயருக்கு சீட்டு விழுந்தது போல்,
அந்த மத்தியாஸ் பெயருக்கு விழுந்தது போல்
நமக்கும் விழுந்தது என்று... நமக்கு ஒரே சந்தோசம் தான், தாங்க முடியலே, ஏன்னா அது தான் முதல் குலுக்கல்,

வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் சொன்னதும், அம்மா சொன்னாங்க, "மதி பயன்னா சும்மாவா " அப்படின்னு.

இன்னும் வெப்பக் காட்டின் கதைகள் வெடிக்கும்.

கவிஞர் இரா. மதிராஜ்

கண் விழித்துப் பார்த்த போது 'சொர்க்கத்தில் இருக்கின்றோமோ.. சொகுசான மெத்தை வெள்ளையுடை தரித்த தேவதைகள் நடமாடுகிறர்களே' என்றுதான் யோசித்தான்.

காலில் கொஞ்சம் கொஞ்சமாக வலி ஏற ஆரம்பிக்க மந்திரியின் கெஸ்ட்ஹவுசிற்கு சென்று மணாளனைக் கொன்று விட்டு மந்திரியை வீழ்த்துவதற்குள் காவலாளிகள் ஓடிவந்துவிட தப்பிக்கும் போது ஏதோ ஒரு கூர்க்கா சுட்டதில் காலில் குண்டு சிராய்த்துக் கொண்டு போனநினைவுவந்தது.

வலி கடுமையாகத் தெரிந்தபோது அந்தக் கன்னியாஸ்திரி பெண்மணி தும்பைப்பூ வெண்ணுடை தரித்து "ஹவ் டூ யூ ஃபீல் யங் மேன்." என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

தெரிந்த ஓட்டை ஆங்கிலத்தில் "நான் நன்றாக இருக்கிறேன். எப்படி இங்கே வந்தேன். என்னால் வலி தாங் கமுடியவில்லை." என்றான். வலியின் மிகுதியில் அவனை அறியாமல் கண்ணீர் பொங்கி வந்தது.

"அழாதே மகனே கர்த்தர் உன்னைக் காப்பாற்றுவார். நல்ல வேளை குண்டு சிராய்த்துக் கொண்டு போய் விட்டது. உள்ளே போயிருந்தால் மிகவும் கஷ்டப்பட்டிருப்பாய். உனக்கு ஏன் இந்த நிலமை? ஏன் இப்படி அடி பட்டாய்? உன்னை யார் துப்பாக்கியால் சுட்டார்கள்? என்ற எந்த விபரமும் நீயாக விரும்பினால் மட்டும் சொன்னால் போதும்.

தேவன் வல்லவர். அவரிடம் வேண்டிக் கேள். உன் மனக் கவலைகளையும் உடல் வலியையும்போக்குவார். வலிக்கிறதா? என்று அவன் தலையைக் கோதியப்படிக் கேட்டார்.

"ரொம்ப வலிக்கிறது" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான். காலில் குண்டு பட்ட வலியை விட மனதில் வலி மிகவும் அதிகமாக இருந்தது. "சிஸ்டர் சில்வியா இவருக்கு தூக்க மாத்திரை கொடுங்கள். இன்னும் நிறைய ஓய்வெடுக்கட்டும். "என்று அந்த வெண்ணுடை சிஸ்டர் ஆணையிட இன்னொரு வெண்ணாடை தரித்த கன்னியாஸ்திரி வந்து ஊசி போட, ஏதோ எங்கோ எறும்பு கடித்தமாதிரி உணர்வு வரத் தூங்கிப் போனான்.

கவிஞர் இராஜகைநிலவன்

'அண்ணே இப்படிப் பண்ணிவிட்டாயே... என் ஆன்மா சாந்தி அடையவேண்டாமா? இப்படி படுக்கையில் விழுந்து கிடக்கிறாயே... அந்தப் பாவியைக் கொல்லாமல் என்னிடம் வந்து விடப் போகிறாயா?

"எழும்பு அண்ணா..."கவுசல்யா என்று பாசமாகச் சுற்றிச் சுற்றி வந்து அன்போடு வளர்த்த உன் தங்கையின் நிலைமையைக் கவனித்துப் பார், என் ஆத்மா சாந்தி அடைய அந்தப் படுபாவியை இந்தப் பூமியிலிருந்து நீ உடனடியாக பரலோகத்திற்கு டிக்கெட் வாங்கி அனுப்ப வேண்டாமா?

என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அந்த மந்திரி உன்னையும் இப்படி படுக்க வைத்து விட்டானே... வா... அண்ணா... அவன் மட்டும் நம் குடும்பத்தை சீரழித்து விட்டு மகிழ்ச்சியாக இருக்கலாமா....."

"கொஞ்சம் யோசித்துப் பார். நீயும் மஞ்சுளாவும் எத்தனை மகிழ்ச்சியில் ஊரில் தரிசுக்காட்டிலும் வயல் வரப்புகளிலும், வலம் வந்தீர்கள். பார்.... என்னை இந்தநிலைமைக்கு ஆளாக்கி உன்னை எனக்காக இப்படி அலைய வைத்து... சே! எவ்வளவு கொடூரமான விசயம். எழுந்து போ அண்ணா... அவனை இந்த உலகத்திற்கு அனுப்பு... நான் அவனை இந்த உலகத்திலும் நிம்மதி இல்லாமல் அலைய வைக்கிறேன்.

கால் வலிக்கிறதா? வலிக்கட்டுமே.... மனதில் ஏற்பட்டிருக்கும் இந்த வலியின் கடுமையைக் கணக்கிடும் போது... இந்தக் கால் வலியெல்லாம் எம்மாத்திரம்..."

கவுசல்யா தலை விரி கோலத்துடன் கைகளை விரித்துக் கொண்டு கெஞ்சிக் கேட்க, கனவு கலைந்து எழுந்தான். உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. பையில் வைத்திருந்த அந்த முகவரியை எடுத்துவாசித்தான். எங்கேஇருக்கும்? இந்தக் கால் வலியோடு போகமுடியுமா? நெஞ்சுக் கூட்டுக்குள் தெம்பிருக்கும் வரை என்னால் எங்கே வேண்டுமானாலும் போக முடியும். யோசித்துக் கொண்டிருந்தவன் அந்தவழியாக போன கம்பவுண்டரைக் கூப்பிட்டு "இந்த அட்ரஸ் எங்கே இருக்கிறது ? "என்று மராத்தி தெரியாததால் ஆங்கிலத்தில் கேட்டான்.

அவனுடைய ஆங்கிலம் புரியாவிட்டாலும் அவன் என்ன கேட்கிறான் என்பதப் புரிந்து கொண்ட கம்பவுண்டர் "இதோ மருத்துவமனைக்கு அடுத்தாற் போல தான் இருக்கிறது. அங்கே ஏதோ விசேசம் என்றுநினைக்கிறேன். தோரணங்கள் எல்லாம் கட்டியிருக்கிறார்கள். நிறைய ஆட்கள் கூடியிருக்கிறார்கள். யாரோ வி.ஐ.பி. வருகிறார் போல இருக்கிறது. உனக்கு குடிப்பதற்கு சூடாக ஏதாவது தரச் சொல்லவா?" என்று கேட்டான் ஆங்கிலத்திலும் மராத்தியிலும்கலந்தவாறு.

சூடான ஒரு தேநீர் அருந்தினால் கொஞ்சம் தேவலாம் போலத் தோன்றியது. "ஒரு டீ கொடுக்கச் சொல்லேன்" என்றான் பழனி. கொஞ்ச நேரத்தில் ஒரு பணிப் பெண் சூடாக தேநீர் கொண்டு வர, அவன் குடித்து முடித்ததும் கப்பை வாங்கிக் கொண்டான். "என்னை கொஞ்சம் கழிவறை வரை கொண்டு போக முடியுமா? "என்ற அவன் வார்த்தைகளையும் செய்கைகளையும் புரிந்து கொண்ட பெண் அவனை கைத் தாங்கலாக கழிவறைக்குக் கூட்டி வந்தாள்.

பின் பகுதி பாக்கெட்டை தொட்டுப் பார்த்துக் கொண்ட பழனி வேகமாக அவளைத் தள்ளி விட்டு கிழே இறங்க அவள் "ஏய் அங்கே எல்லாம் போகக்கூடிய நிலைமையில் நீ இல்லை" என்று அவள் சொல்வதற்குள் அந்தக் கட்டிடத்தை விட்டு தாண்டியிருந்தான் பழனி.



தொடரும்...


கவிஞர் இராஜகைநிலவன்

# உறவின் மாறாட்டம்

## நூல் அனுபவம்

## சிறுகதை தொகுப்பு

ஒவ்வொரு கதைக்குள்ளும் ஒவ்வொரு உணர்வுகள்




கதைகளைக் கேட்டுக்கேட்டு, கதைகளைக் கொண்டாடி, கதைகளோடவே வாழ்ந்து, கதையாகிப்போன முன்னோர்களை வாழ்வியலின் வழிகாட்டியாக ஏற்று, வாழ்ந்து, வளர்ந்த, சமூகம் தமிழ்ச் சமூகம். கதைகள் வேறு, தமிழ்ச் சமூகம் வேறு என்று பிரிக்க முடியாத அளவிற்குத் தமிழ்க் கதைகள், சங்க இலக்கியம் தொட்டு இன்று வரை நீண்டு கொண்டே இருக்கிறது.

அறிவியல் வளர்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும் வருவதற்கு முன்பாகவே கதைகளை ஊடகமாகக் கொண்டு வாழ்வியல் சிந்தனைகளை, அறக்கூறுகளை, நீதிகளை, உணர்வுகளை, உறவுகளை, மன்னர்களை, மாண்புமிக்க மனிதர்களைக் கதைகள் வழியே கடத்திக் கொண்டாடிய தமிழ்ச் சமூகத்தில் இன்னொரு நல்முத்தாகக் கிடைத்திருப்பவர்தான் நமது மும்பை வாழ்த் தமிழர், என் பேரன்பு நண்பர் இரஜகை நிலவன் அவர்கள்.

தொடர்ந்து கவிதைகளாலும், கட்டுரைகளாலும், கதைகளாலும் தமிழ் இலக்கியத்தில் இயங்கிக் கொண்டே இருக்கின்ற ஒரு உன்னத எழுத்தாளர், படைப்பாளர், எல்லோர் நலம் போற்றும் பண்பாளர். மும்பையின் ஒரு நிகழ்வில் எனக்கும் இவருக்குமான அறிமுகம் தொடங்கி; கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது எங்களுடைய நட்புறவு.

இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்ற கதைகள் யாவும் சுருக்கமாகவும், மனதிற்கு நெருக்கமாகவும் இருந்து சமூகச் சிந்தனைகளை கொண்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இயல்பாகத் தொடங்கும் கதை நீரோடையைப்போல் இதமாக ஓடி பயணித்து இறுதியில் ஒரு திருப்பத்தோடு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தி முடிவில் நம் சிந்தனை ஓட்டத்தையும், நம்

நம் எண்ணத்தையும் அக்கதையைச் சுற்றியே சுழல வைத்திருப்பதை நம்மால் உணர முடிகிறது.

கதைக்கும், கட்டுரைக்கும் ஒரு மெல்லிய இடைவெளியே இருக்கும். கதையில் கொஞ்சம் பிசகினாலும் கூட அது கட்டுரையாக மாறிவிடக் கூடும். கைதேர்ந்த எழுத்தாளர்களே கட்டுரை எழுதும்போது கதையாகவும், கதை எழுதும்போது கட்டுரைப் போலவும் எழுதி விடுவதுண்டு. இவருடைய கதைகள் மிக நேர்த்தியாக இயல்பான சமூகப் பின்னணியில் பின்னப்பட்டுக் கருத்து கோர்வையோடு இத்தொகுப்பு முழுவதும் வளம் வந்து பலம் சேர்த்திருக்கிறது.

இக்கதையில் வரச் சம்பவங்கள் நிச்சயமாக உங்கள் வாழ்வில் நடந்திருக்க வேண்டும் என்கின்ற கட்டாயம் இல்லை. ஆனால்., இத்தொகுப்பை வாசிக்கும் பொழுது இது போன்ற ஒரு சம்பவம் எங்காவது நடந்திருக்கும் படியாக நீங்கள் கேட்டிருக்கலாம், அல்லது உங்கள் வாழ்க்கையில் கூட நடந்து இருக்கலாம் என்று நினைக்கும் படியான தோற்றத்தை மிக எளிதாக ஏற்படுத்தி விடுகிறார் எழுத்தாளர் இரஜகை நிலவன் அவர்கள். இதுதான் இவர் இக்கதைகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்று நான் நம்புகிறேன்.

தன் கதைக்குள்ளே சமூகத்தை, குடும்பத்தை, தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்தி எல்லோருக்குமான சிறுகதைத் தொகுப்பை, எல்லோரும் ரசிக்கும் படி, மிக இயல்பான சம்பவங்களைக் கதையாக்கியிருக்கும் யுக்தி போற்றுதலுக்குரியது. இக்கதைகளில் பல குறும்படங்களாக எடுப்பதற்கான எல்லாத் தகுதிகளும் பெற்றிருக்கின்றன. அப்படி இச்சிறுகதைகளைக் குறும்படகளாக எடுக்கும்பட்சத்தில் இது நன்கு வரவேற்பைப் பெற்றுத்தரும் என்று நம்புகிறேன்.

கதைகளுக்குள் கதாபாத்திரங்கள் அனைத்தும் ஒன்றியிருப்பதும், அவர்களுடைய உரையாடல்கள் இயல்பாகவும், உரையாடல்களில் உணர்வுகள் சரியான விதத்தில் மேலெழச்செய்து வாசகர்களாகிய நம்மை அக்கதைகளுக்குள்ளே வாசம் செய்ய வைத்திருக்கிறார் எழுத்தாளர் இரஜகை நிலவன். இது போன்ற உளவியல் யுக்தி வெகுசில எழுத்தாளர்களுக்கு மட்டுமே சாத்தியமாகிறது. இவ்வனைத்துச் சிறுகதைகளையும் இவர் உளவியல் ரீதியாக எழுதியிருப்பதால் இவருக்கு இது சாத்தியப்பட்டு இருக்கிறது.

ஒவ்வொரு கதைக்குள்ளும் ஒவ்வொரு உணர்வுகள் மேலோங்கி நிற்பதைப் பார்க்க முடிகிறது. கதைகளில் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒவ்வொரு உணர்வைப் பிரதிபலிக்கும் வகையிலும், அது நிகழ்கால சம்பவங்களின் அடிப்படையிலும் நேர்த்தியாக எழுதப்பட்டிருப்பதால் இத்தொகுப்பு கவித்துவமாக வந்திருக்கிறது எனலாம். இந்தத் தொகுப்பில் உள்ள பல கதைகள் எதார்த்தமாக, இயல்பாக அமைந்திருக்கிறது.

எடுத்துக்காட்டுக்குச் சில கதைகளைச் சொல்லுகிறேன். "உறவின் மாறாட்டம்" என்ற கதையில் கணவன் மனைவி உறவையும், "பின் தொடர்ந்தவன்" என்ற கதையில் தேவை ஒன்றையும், "திலக் திவ்யா தீபாவளி" என்ற கதைகள் குழந்தைமையையும், "எங்கே போனாள் சுதந்திரத்தாய்" என்ற கதையில் வக்கிரத்தையும், "மனசு" என்ற கதையில் காதலையும், "தீபா வ(ள்)ளி" என்ற கதையில் நகைச்சுவையையும், "எது தண்டனை" என்பதில் நாட்டுப்பற்றையும், "இன்னொரு சுதந்திரம் எப்போது" என்ற கதையில் தன் கடமையைச் செய்யாத கயவர்களையும், "சொல்லால் அடித்த சுந்தரன்" என்ற கதையில் ஒழுக்கத்தையும் என, ஒவ்வொரு கதைக்கும் ஒரு மையக்கருவை வைத்து கதையை நகர்த்தி இருக்கிறார். அந்த மைய கருவே கதையை உயிரோட்டமாக நகர்த்திச் செல்கிறது.

நேர விரயம் இல்லாமல் குறுகிய காலத்தில் மனதில் ஒட்டிக் கொள்ளக்கூடிய நச்சென்று நறுக்கான கதைகளைத் தந்திருக்கும் எழுத்தாளர் இரஜகை நிலவன் மீண்டும் ஒரு சிறப்பான சிறுகதைத் தொகுப்பை தந்திருக்கிறார். இவருடைய படைப்பாற்றல் திறன் போற்றுதலுக்குரியது. இது போன்று இன்னும் பல படைப்புகளை இவர் வெளிக்கொண்டு வரவேண்டும். "உறவின் மாறாட்டம்" என்ற இவரின் இச்சிறுகதைத் தொகுப்பு பல விருதுகளைப் பெற்று இவருக்குப் புகழும் சேர்க்க வேண்டும் என்று அன்பாய் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

# கூத்து

## நூல் அனுபவம்

## சிறுகதை தொகுப்பு

**நூலின் பெயர். கூத்து ( சிறுகதை )**
**நூல் ஆசிரியர். கண்மணி ராசா**
**நூலின் விலை. ₹120**
**நூல் வெளியீடு. தமிழ் வெளி.**




நூலாசிரியர் கண்மணி ராசாவின் நான்காவது புத்தகம் இது . இதற்கு முன்னர் " கவிதையாவது கழுதையாவது" லட்சுமிக்குட்டி , ஏன் பெயரெழுதிய அரிசி என மூன்று கவிதை நூல்கள் எழுதியுள்ளார்.
கல்யாண்ஜி என்று அன்புடன் அழைக்கப்படும் ஐயா வண்ணதாசன் அவர்களின் மண்ணுடைய ருசி மனுசங்களுடைய ருசி வாழ்த்துரையில் மேலும் செழுமை பெற்றுள்ளது இந்த நூல்.

பெத்தம்மா வீடு உயிரோட்டமான கதைக் களம் வெகு நேரமாக கதைக்குள் இருந்து வெளி வரவில்லை மனது
இதுபோக லாட சன்னாசி , கூத்து, லெட்டு சுப்பம்மா , போன்ற வரிசையாக நல்ல கதைகள் ஒன்றைச் சொல்லி இன்னொன்றை விட முடியாது .

சுரைக்காப்பட்டி லாட சன்னாசியும் கருப்பையாவும் ஒரே ஆளா ? வேறு வேறா ? லாட சன்னாசி டைரியை எரித்தால் கருப்பையா டைரி கலிங்கலில் கிடைத்ததே.

இளங்காத்து வீசுது " கூத்துகாரர்கள் பின்னாலேயே சின்னவயதில் போய் திரும்பி வந்து , புளிய விளாறில் அப்பாவிடம் அடிபட்ட சிவகாமி நாதமாமாவின் வாழ்வு ஒரு கூத்தாகத்தானே மாறிவிடுகிறது .
புங்கை மரத்தில் தானாகவும் ரெங்கையா ஆகவும் மாறி மாறி அவர் நடத்திய அந்த சிதைவுண்ட கூத்து எவ்வளவு பெரிய அவலம்.


திரு மூ. மணி திருமுருகன், சங்கரன்கோவில்

# கூத்து

நூல் அனுபவம் — சிறுகதை தொகுப்பு

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மற்றும் அதை சுற்றியுள்ள கரிசல் மண்ணில் இயல்பான வாழ்வியலை சித்தரிக்கும் இந்த சிறுகதைத் தொகுப்பு நூலாசிரியரின் முதல் தொகுப்பு என்பதை நம்பவில்லை வசித்து விட்டால் வசப்பட்டு விடுவீர்கள். பாராட்டும் வாழ்த்துக்களும்.




அறிமுகம் செய்வது.

திரு மு. மணி திருமுருகன், சங்கரன்கோவில்

# தேவநேயப் பாவாணர்

## கட்டுரை



**வாழ்க்கை குறிப்பு:**

பெற்றோர் - ஞானமுத்து, பரிபூரணம்
ஊர் - சங்கரன்கோவில்
கல்வி - பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பிஓ.எல்.,
காலம் - 07.02.1902 - 15.01.1981
சிறப்பு : செந்தமிழ்ச்செல்வர், செந்தமிழ் ஞாயிறு ,தமிழ்ப் பெருங் காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்

**தமிழ்பற்று:**

தன்மை மோதிய மிதிவண்டிக்காரர் கூறிய மன்னித்து கொள்க என்ற சொல்லை, மன்னிப்பு உருதபச்சொல், பொறுத்துக்கொள்க என தமிழில் சொல்லவும் என்று கூறி, மிதிவண்டிக்காராரையும் சொல்லச் செய்தவர்.

**தமிழை வளர்த்தவர்:**

தமிழின் தொன்மையை உலகறிய செய்தவர் - கால்டுவெல்
தனித் தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற்கலைஞர்
தமிழைத் தழைக்கத் செய்த செம்மல் - மறைமலையடிகள்
தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப்பாவாணர்.

**தமிழை மீட்டல்:**

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# தேவநேயப் பாவாணர்

## கட்டுரை

### தமிழை மீட்டல்:



உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேறும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவியவர். உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம்" என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் அவரது ஆய்வின் இரு கண்கள்.

"தமிழை வடமொழி வல்லான்மையில் இருந்து மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைதான்" என்று கூறினார்.

### அனைத்தும் தமிழில்:

கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்றார்.

பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் என்றும் பாவாணர் வலியுறுத்தினார்.

### பகலுணவு, இரவுணவு:

ஒருமுறை தன் ஆசிரிய நண்பர்களுடன் சென்று தாரைமங்கலம் என்னும் ஊரில் தங்கினார்.

அங்கு ஒருவர் பாவனாரிடம், "ஐயா பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன?" என்று கேட்டார்.

பாவாணர், "பாகல் உணவு, பகல் உணவாகவும்(பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்தது), இரா உணவாகவும் (அனைவரும் உணவின்றி இரவைக் கழித்தல்) இருந்தன"

திரு அ.வில்சன், இதழாசிரியர்


தமிழ் வளர்த்தல் பசியும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என்று எண்ணியவர் பாவாணர்.

## நீலமலை(நீலகிரி):

ஒருமுறை நீலமலைக்குச் சென்று அங்கு கிருட்டினையா என்பவர் வீட்டில் உணவு உண்டார். கிருட்டினையா வெளியே சென்று மீண்டும் வீடு வரும்போது பாவாணர் அங்கு விறகு வெட்டி கொண்டு இருந்தார். கிருட்டினையா, இதை நீங்கள் செய்ய வேண்டாம் என கூறியதற்கு, "உண்ட வீட்டிற்கு ஏதாவது செய்யவேண்டும், உட்கார்ந்து கொண்டு உண்டு செல்வது நன்றாகாது" என்றார்.

## பாவாணரின் படைப்புகள்:

- தமிழ் வரலாறு
- முதல் தாய்மொழி
- தமிழ்நாடு விளையாட்டுகள்
- தமிழர் திருமணம்
- வடமொழி வரலாறு
- தமிழர் மதம்
- மண்ணிலே விண்
- பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- உயர்தரக் கட்டுரை இலக்கணம்
- சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- திருக்குறள் மரபுரை




## அகரமுதலி:

பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சில

### அகரமுதலி:


பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சில தொகுதிகளை வெளிக்கொணர்ந்தார். இருநூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

### சிறப்புகள்:

பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் நூலகம் செயல்பட்டு வருகிறது. இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பில், பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

### தமிழன்னைக்கு பெருமை:

மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்கு பெருமை சேர்த்தார்.



### மறைவு

ஜனவரி 5,1981-ல் உடல் நலம் சரியில்லாது அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். நோயிலிருந்து மீளாமலேயே ஜனவரி 15, 1981-ல் காலமானார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

## முயற்சியின் பாதங்களை

## வணங்கியே தீரும்

## வெற்றியின் சிரம்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com